செய்தி வெளியீடு எண். 167 நாள் : 24.03.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட சுகாதார சங்கம் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத்திட்டம் சார்பாக உலக காசநோய் தின விழிப்புணர்வு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட சுகாதார சங்கம் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத்திட்டம் சார்பாக உலக காசநோய் தின விழிப்புணர்வு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.03.2017) நடைபெற்றது. துணை இயக்குநர் (காசநோய் தடுப்பு) மரு.அ.இலட்சுமி முரளி அவர்கள் திட்ட விளக்க உரை வழங்கினார். திட்ட விளக்கவுரை கணினி மூலம் மின் திரையில் விளக்கமாக எடுத்து கூறப்பட்டது.

காசநோய் விழிப்புணர்வு கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டு, காசநோய் விழிப்புணர்வு பலகையில் கையொப்பமிட்டார். மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் மாவட்ட காசநோய் மையத்தின் ஆண்டு மலர் மற்றும் காசநோய் விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வெளியிட்டார். காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து பொருட்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும் சிறப்பாக பணிபுரிந்த சுகாதார பணிகள் துணை இயக்குநர், மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர், அரசு மருத்துவமனை, தலைமை மருத்துவர்கள், வட்டார மருத்துவ அலுவலர்கள், காசநோய் களப்பணியாளர்களுக்கு நினைவு பரிசுகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர் மரு.ஜே. பிரபாகரன், திருவள்ளூர் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.நாகேந்திர பிரசாத், மருந்துக் கட்டுப்பாட்டுதுறை உதவி இயக்குநர் திரு.ஆர். கண்ணன், அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர்கள், வட்டார மருத்துவ அலுவலர்கள், இந்திய மருத்துவ சங்கம், மருந்து வணிகர்கள் சங்கம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் கலந்துகொண்டனர். மாவட்ட காசநோய் மைய மருத்துவ அலுவலர் மரு.எ.சங்கீதா அனைவரையும் வரவேற்றார். மருத்துவ அலுவலர் மரு.கே.பைரவ சுவாமி அவர்கள் நன்றி கூறினார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~